## பயணம் மேற்கொள்ளும்போது ஓதவேண்டிய துஆ

*ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத் தூதர் ﷺ அவர்கள் பயணம் மேற்கொள்வதற்காக தன்னுடைய ஒட்டகையின்மீது ஏறி அமர்ந்துவிட்டபின் மூன்று முறை* اللهُ أَكْبَرُ *சொல்லி அதன்பின் இந்த துஆவை ஓதுவார்கள்:*

**سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا، وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ، وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ، اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِي سَفَرِنَا هَذَا الْبِرَّ وَالتَّقْوَى، وَمِنَ الْعَمَلِ مَا تَرْضَى، اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا، وَاطْوِ عَنَّا بُعْدَهُ، اَللّٰهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ، وَالْخَلِيفَةُ فِي الْأَهْلِ، اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ، وَكَآبَةِ الْمَنْظَرِ، وَسُوءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ**

*பொருள்: இந்த சாதனங்களை நமக்காக அமைத்துத்தந்த அந்த இறைவன் மிகவும் பரிசுத்தமானவன், இதனை நாம் அமைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. ஒரு நாள் நாம் அனைவரும் அவன்புறமகவே திரும்பிச்செல்லவேண்டியிருக்கின்றது. எங்கள் இறைவனே, நாங்கள் இந்தப் பயணத்தில் நலனையும் இறையச்சத்தையும், உன்னுடைய திருப்பொருத்தத்திற்கான அமல்களையும் நாடுகிறோம். எங்கள் இறைவனே, எங்களுடைய இந்தப் பயணத்தை எளிதாக்கி வைப்பாயாக, அதற்கான தூரங்களைக் குறுகியவையாக ஆக்கிவைப்பாயாக, எங்கள் இறைவனே, நீதான் பயணத்தில் எங்கள் துணைவனாக இருக்கின்றாய். நாங்கள் இல்லாத போது எங்கள் வீட்டாரைப் பாதுகாப்பவனாக இருக்கின்றாய். எங்கள் இறைவனே, நான் உன்னிடம் பயணத்தின் கஷ்டங்கள் மற்றும் தீங்குகளை எதிர்கொள்வதிலிருந்தும், என்னுடைய வீட்டார் மற்றும் என்னுடைய செல்வத்தின் பாதிப்புகளுக்குள்ளாகும் நிலையில் திரும்பி வராமலிருக்க வேண்டும் என்றும் உன்னுடைய பாதுகாப்பு தேடுகிறேன். (முஸ்லிம்)*

www.uzairfalahi.com

* * *